2014 பிப்ரவரி 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன்.

திரு. கே.பி. நாகராஜன்: கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், வணங்குதலுக்கும் போற்றுதலுக்கும் உரிய ஆராதனைக்குரிய தெய்வம், நான் வணங்கும் அன்னை, நடமாடும் மனித தெய்வம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை இங்கிருந்தவண்ணம் அவர்களது மலர்ப்பாதம் தொட்டு வணங்குகிறேன். இங்கே புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மயிலம் சட்டமன்றப் பேரவைத் தொகுதியிலே, நான் கேட்பதற்கும் முன்பாகவே அந்த நெடிமோழியனூர் கிராமத்திலே கால்நடை பராமரிப்புத் துறையினுடைய கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தரும்படி ஆணை பிறப்பித்த அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி, 'கோமாதா எங்கள் குல மாதா, குலம் காக்கும் நலம் யாவும் அரும் மாதா, எங்கள் அரும் மாதா', 'தன்னையே கொடுத்தாலும் வாழைக்கு ஈடு சம்சாரி வாழ்வுக்கு ஒரு பசு மாடு', (மேசையைத் தட்டும் ஒலி) 'தன்னையே கொடுத்தாலும் அதற்கேது ஈடு', 'அம்மாவே நீங்கள் நினைத்தது நாடு, அம்மா கோமாதா எங்கள் குல மாதா" (மேசையைத் தட்டும் ஒலி). என்று கூறி மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு என்னுடைய கோடானுகோடி நன்றி மலர்களை அம்மாவினுடைய பாதத்தில் சமர்ப்பித்து, நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

58—

பேருந்து கூண்டு கட்டும் பிரிவு

***23064—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 பிப்ரவரி 17

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரையிலுள்ள சிப்காட் வளாகத்தில் பேருந்து கூண்டு கட்டும் பிரிவு தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை சிப்காட் வளாகத்தில் அரசின் சார்பில் பேருந்து கூண்டு கட்டும் செயல்திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருந்தாலும், தொழில் முனைவோர் முன்வந்தால் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலித்து முடிவெடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒட்டுமொத்த தமிழர்களுடைய தலைவராகவும், பாதுகாவலராகவும் விளங்கிக்கொண்டிருக்கின்ற வாழும் மனித தெய்வம், மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, ஒருங்கிணைந்த இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து, சிவகங்கை மாவட்டத்தை பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் என்று அறிவித்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களைப் போல, சிவகங்கை மாவட்டத்திற்கு மாமன்னர்கள் மருதுபாண்டியர்களுக்கு சிலையெடுத்தும், நினைவுத் தூண் எழுப்பியும், வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கவும் தியாக மங்கை குயிலிக்கு நினைவுச் சின்னம் அமைப்பதற்கும் ஏற்பாடு செய்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை மீண்டும் ஒரு முறை வணங்கி, தெய்வீகத் திருமகனார் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு சமீபத்தில் தங்கக் கவசம் அணிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய சிவகங்கை மாவட்ட ஒட்டுமொத்த மக்களின் சார்பாக இந்தத் தருணத்தில் நன்றியினைக் கூறிக்கொள்கிறேன்.*

2014 பிப்ரவரி 17]

சிவகங்கை மாவட்டத்தில், மானாமதுரை தொகுதி எப்போதும் அம்மாவினுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டையாக விளங்கிக் கொண்டிருக்கின்றது.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ம. குணசேகரன்: அத்தகைய மானாமதுரை தொகுதிக்கு ஒரு தாலுகா அலுவலகமும், ஒரு மருத்துவமனையையும் தந்திருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்கள், அதே வரிசையில் அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கின்ற— மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்டு இயங்கிவருகின்ற அந்த மானாமதுரை சிப்காட் வளாகத்தில் அரசு சார்பாக பேருந்து கூண்டு கட்டும் தொழிற்சாலையைத் தொடங்கி அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கனவை நனவாக்கித் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களிடம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சிப்காட் வளாகம் என்றால் தொழில் முனைவோர் வருகின்றபோது அந்த வளாகத்தில் இடம் தேர்வு செய்யப்பட்டு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதுதான் சிப்காட் நிறுவனத்தின் பணி என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றேன். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த சிப்காட் வளாகத்தில் பேருந்து கூண்டு கட்டும் தொழிற்சாலை அமைக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல தொழில் முனைவோர்கள் வந்தால் நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதற்கு ஆவன செய்து, அதற்கு முன்னுரிமை கொடுக்கும். ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்கள் தென் தமிழகத்திலே தொழில் துவங்க வருபவர்களுக்கு புதிய சலுகைகளையெல்லாம் அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு

நிச்சயமாக ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், நம்முடைய இதயங்களில் என்றென்றும் வாழ்ந்துகொண்டிருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால் மானாமதுரை சிப்காட் வளாகம் தொடங்கப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்த சிப்காட் வளாகத்திற்கு 436 ஏக்கர் என்பதற்குப் பதிலாக 2,000 ஏக்கர் நிலம் ஒதுக்கி, அதை ஒரு பெரிய சிப்காட் வளாகமாக அமைக்க கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் அறிவித்திருந்தார்கள். அதைப்போல தென் மாவட்டங்களில் புதிய தொழில்கள் தொடங்கப்படும் எனவும் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருந்தார்கள். அதை அடிப்படையாகக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானாமதுரையில் இருக்கின்ற அந்த சிப்காட் வளாகத்தில் பேருந்து கூண்டு கட்டும் தொழிற்சாலைத் திட்டம் இந்த நிதியாண்டிலேயே தொடங்குவதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று அதை நிறைவேற்றித் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய தொழிற்பூங்கா தொடங்குவதற்காக சுமார் 2,700 ஏக்கர் நிலப் பரப்பில் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக சிவகங்கை மற்றும் காரைக்குடி வட்டங்களில் அடங்கிய கிளாதாரி, இலுப்பக்குடி மற்றும் அரசனூர் ஆகிய கிராமங்களில் நிலம் கண்டறியப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து தொழில் தொடங்குபவர்கள் முன்வருகின்றபோது முன்னுரிமை அடிப்படையில் இந்த ஆண்டே மானாமதுரை சிப்காட் வளாகத்தில் தொழில் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.